6. அரசுத் தனித் தீர்மானம்.

தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு உறுதியளித்துள்ள அதிக அளவுத் தொகை குறித்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

" தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு உறுதியளித்துள்ள அதிக அளவுத் தொகையின் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி வரை (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) தமிழ் நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவின் (2) உட்பிரிவின்படி மாநில அரசு உயர்த்தலாம் என்று இம்மன்றம் மாநில அரசுக்குப் பரிவுரை செய்கிறது. வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்கள் இதில் அடங்காது; அத்தகைய கடனீட்டுப் பத்திரம் வெளியிடப்பட்ட நாள் முதல் எந்த ஒரு நேர்விலும் அக்கடனீட்டுப் பத்திரங்களின் கால அளவு 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. கடனீட்டுப் பத்திரங்களின் ஒவ்வொரு தொடருக்கும் கொடுக்கப் படும் வட்டி வீதம் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்துக்கு மேற்படக்கூடாது".

இதைப் பற்றிய விளக்கக்குறிப்பு மாண்புமிகு உறுப்பினர் களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" தமிழ் நாடு மாநிலம் கூட்டுறவு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு உறுதியளித்துள்ள அதிக அளவுத் தொகையின் மொத்த மதிப்பு ரூ. 175 கோடிவரை (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) தமிழ் நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவின் (2) உட்பிரிவின்படி மாநில அரசு உயர்த்தலாம் என்று இம்மன்றம் மாநில அரசுக்குப் பரிவுரை செய்கிறது. வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்கள் இதில் அடங்காது; அத்தகைய கடனீட்டுப் பத்திரம்

வெளியிடப்பட்ட நாள் முதல் எந்த ஒரு நேர்விலும் அக்கடனீட்டுப் பத்திரங்களின் கால அளவு 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. கடனீட்டுப் பத்திரங்களின் ஒவ்வொரு தொடருக்கும் கொடுக்கப் படும் வட்டி விதம் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி விதத்துக்கு மேற்படக்கூடாது".

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மாநில நிலவள வங்கியின் கீழ் பல ஆரம்ப நில வள வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக் கின்றன. நமது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அநேகமாக வட்டாரத்திற்கு ஒன்று விதம் ஸ்தாபிக்க முற் பட்டார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அது இடையில் நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு சில வட்டாரங்களில் மட்டும் தான் இந்த ஆரம்ப நிலவள வங்கிகள்-பிரைமரி பேங்க்-ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளின் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். சில வங்கிகள் செயல்படாமலே பெயரளவில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சில வங்கிகள் நன்றாகச் செயல் பட்டு வருகின்றன. இந்த நிலைமைக்கு என்ன காரணம், அவைகள் ஏன் செயல்படாமல் இருக்கின்றன என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கினால் நல்லது. இப்போது 175 கோடி ரூபாய்க்கு நமது அரசாங்கம் கியாரண்டி கொடுக்கும் பிரேரேபணையை அவசியத்தை முன்னிட்டு ஒத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நேரத்தில் ஏற்கெனவே ஸ்தாபிக்கப் பட்டிருக்கக்கூடிய ஆரம்ப நில வள வங்கிகள் எப்படி நடை பெறுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் மாநில நிலவள வங்கியை ஒட்டியது, பிரதம நிலவள வங்கிகளைப்பற்றி ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை என்று கருதி, அவைகளைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் பிரதம நிலவள வங்கிகள் வட்டார அளவில் 223 இருக்கின்றன. அவைகள் பெரும் பாலும் நன்றாகவே செயல்பட்டு வருகின்றன. இன்றைக்கு நமது மாநில நிலவள வங்கி இந்தியாவிலேயே மிக நன்றாகச் செயல்பட்டு

வருகிறது என்பது புள்ளிவிவரங்கள் மூலமாகவும் தெரிகிறது, மற்றவர்கள் பேசுவதின் மூலமாகவும் தெரிகிறது. நம் மாநில நில்வள வங்கி இதுவரை ரூ. 103.56 கோடிக்கு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிட்டிருக்கிறது. அத்தனையும் பிரதம நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டில் குறைந்தபட்சம் ரூ. 35.75 கோடிக்கு கடனீட்டுப் பத்திரம் வெளியிடலாம் என்று எதிர்பார்க்கிறோம், அதிலேயும் வெற்றி யடைவோம் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. போன வருஷம் உச்ச வரம்பை 75 கோடி ரூபாயிலிருந்து 125 கோடி ரூபாய் ஆக்கினோம். ஆனால் நாம் செயல்பட்டுக்கொண்டுபோகிற வேகத்தில், இன்னும் உச்ச வரம்பை அதிகரிக்கவேண்டியிருக்கிற காரணத்தால், 125 கோடியை 175 கோடியாக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படி உச்ச வரம்பை உயர்த்த இந்த அவையில் அனுமதி கேட்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு இதுபற்றிய புள்ளி விவரங்கள் தெரிந்திருப்பது நல்லது என்ற காரணத்தால் இவைகளை அவைமுன் வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம் ரூ. 103.56 கோடிக்கு கடனீட்டுப் பத்திரம் வெளியிட்டு, அந்தப் பணத்தோடு நாம் இதுவரை மாநிலக் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருக்கிற 4 அல்லது 5 கோடி ரூபாயையும் சேர்த்துப் பார்த்தால், மொத்தம் ரூ. 110 கோடி அளவில் கடன் கொடுத்திருக்கிறோம். இது மற்ற எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலவள வங்கிகள் கொடுத்திருப்பதை விட அதிகமானதாகவும், உயர்ந்ததாகவும் இருக்கிறது. குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள், பிரதம நிலவள வங்கிகள் எப்படி நடைபெறுகின்றன என்று. அவைகள் நன்றாக நடைபெறுகின்றனவா இல்லையா என்று பார்ப்பதற்கான அளவு கோல் ஒன்று தான். அவைகள் கொடுக்கிற கடன் திரும்ப வருகிறதா, ஓவர்-ட்யூஸ் அதிகமாகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, மற்ற எந்த மாநிலத்தையும் விட நம் மாநிலத்தில் ஓவர்-ட்யூஸ் மிகவும் குறைவாக இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் ஓவர்-ட்யூஸ் அதிகமாக இருந்தது. அதுவும் இந்த வருஷம் குறைந்து, அகில இந்தியா விலும் நமக்கு நிகராக எந்த மாநிலத்திலும் செயல்படவில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதாகும். வேறு

மாநிலங்களில் வறட்சி வந்தாலும் வரலாம் என்ற நிலையைப் பார்க்கும்போது, நம் மாநிலத்தில் நிலத்தை வளமடையச் செய்வதின் மூலமாகவும் கிணறு வெட்டி பம்ப்செட்டுகள் வைப்பதன் மூலமாகவும், ஒரு வேளை மழை குறைவாகப் பெய்தாலும் கூட, இனிமேல் நம் மாநிலத்தில், இராமநாதபுரம் கிழக்குப் பகுதியில் கூட வறட்சி ஏற்படாது என்ற நிலை ஏற்படும் அளவுக்கு நிலவள வங்கிகள் செயல்படுகின்றன. அவைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தின் மூலம் கேட்கப்படுகிற அனுமதியை இந்த அவை அளிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு உறுதியளித்துள்ள அதிக அளவுத் தொகையின் மொத்த மதிப்பு ரூ 175 கோடிவரை (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) தமிழ் நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவின் (2) உட்பிரிவின் படி மாநில அரசு உயர்த்தலாம் என்று இம்மன்றம் மாநில அரசுக்குப் பரிவுரை செய்கிறது. வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்கள் இதில் அடங்காது; அத்தகைய கடனீட்டுப் பத்திரம் வெளியிடப்பட்ட நாள் முதல் எந்த ஒரு நேர்விலும் அக் கடனீட்டுப் பத்திரங்களின் கால அளவு 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. கடனீட்டுப் பத்திரங்களின் ஒவ்வொரு தொடருக்கும் கொடுக்கப்படும் வட்டி வீதம் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்துக்கு மேற்படக்கூடாது."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.